Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 | இதழ் Issue : 020 | திங்கள் Monday | 20.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# "தமிழக மக்களை சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப் பார்த்தது பாஜக"



## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை: "தொகுதி மறுவரையறை மசோதா மூலம் தமிழ்நாட்டு மக்களைச் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப் பார்த்த பாஜகவுக்கும், அவர்களுடைய ஏவல் அடிமைகளான அதிமுக-வுக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் மறக்கவே முடியாத மாபெரும் தோல்வியைக் கொடுப்போம்," என்று தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் குற்றஞ் சாட்டியுள்ளார். மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த தொகுதி மறுவரையறை மசோதா தோல்வியடைந்ததையடுத்து, இந்தியா கூட்டணி கட்சிகள் உள்ளிட்ட அனைத்து எதிர்கட்சித் தலைவர்கள், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் ஆதரவு அளித்த தமிழ்நாட்டு மக்களுக்கும் நன்றி தெரிவித்து திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வீடியோவில் கூறி இருப்பதாவது: Delimitation எனும் கருப்புச் சட்டத்துக்கு எதிரான நம்முடைய போராட்டம் வெற்றி பெற்றிருக்கிறது. இந்த ஆபத்தை ஒரு வருடத்திற்கு முன்பே அறிந்து, இந்த வெற்றியைப் பெறுவதற்கான அனைத்துப் பணிகளையும் அப்போதே நாம் தொடங்கினோம். மாநில முதல்வர்கள் - எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒருங்கிணைப்புக் கூட்டம் தொடங்கி, நேற்று முன்தினம் கருப்புக் கொடி ஏற்றி, கருப்புச் சட்ட நகலைக் கொளுத்தினேன்! அதேபோல், நேற்று திண்டுக்கல்லில் வெற்றிக்கான வெடியைக் கொளுத்தினேன்! தீ பரவட்டும் என்று சொன்னேன். அது நாடாளுமன்றம் வரை பற்றிக் கொண்டது.

50, 60-களில் பார்த்த பழைய திமுக-வைப் பார்க்க வேண்டி வரும் ஏன்று எச்சரித்தேன். "அப்படி என்றால் என்ன?" என்று கேட்ட சில அரைவேக்காடுகளுக்கு, "இதுதான்டா திமுக பாருங்கள்" என்று நேற்று ஸ்ட்ராங்காகக் காட்டியிருக்கிறோம். தொகுதி மறுவரையறை என்ற பெயரில், முழுக்க முழுக்க பாஜக-வுக்குச் சாதகமாகக் கொண்டு வரப்பட்ட கருப்புச் சட்டத்தை, நாடாளுமன்றத்தில் தோற்கடித்த அனைவருக்கும் தமிழ்நாட்டு முதல்வராக என்னுடைய நன்றி! நன்றி! நன்றி! முக்கியமாக, இதில் முழுக்க முழுக்க என்னுடன் நின்ற தமிழ்நாட்டு மக்களுக்குத்தான் முதலில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்ல வேண்டும்!

பெண்களுக்கான இட ஒதுக்கீடு என்ற மாறுவேடத்தில் இந்தச் சட்டத்தை பாஜக கொண்டு வரப் பார்த்தார்கள். ஆனால், இந்த ஏமாற்றுத் திட்டத்தை முன்னின்று தோற்கடித்ததே பெண்கள்தான்! அவர்களுக்கு என்னுடைய சல்யூட்!

இந்தியா கூட்டணிக் கட்சிகள் உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்களும் ஒன்றாகச் சேர்ந்து நின்ற காரணத்தினால், இது சாத்தியமாகியிருக்கிறது. வடக்கு - தெற்கு என நமக்குள்ளே பிளவை ஏற்படுத்தி, சண்டை போட்டுக் கொள்ள வைக்கலாம் என்று நினைத்தவர்களுக்குச் சரியான சம்மட்டியடி கிடைத்திருக்கிறது. 12 ஆண்டுகளில் முதல் முறையாகப் பிரதமர் மோடி அரசு கொண்டு வந்த அரசியலமைப்புச் சட்டத் திருத்த மசோதா தோல்வியடைந்திருக்கிறது! இது தொடக்கம்தான்! பாஜக இனி நாடு முழுக்கப் பெறப் போகும் தோல்விகளுக்கான தொடக்கம் இது! எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைக்கான தொடக்கம் இது! நாம் ஒன்றுபட்டால் வெற்றி உறுதி என நான் தொடர்ந்து சொல்லி வந்தேன். அது உண்மை எனக் காட்டியிருக்கும் தொடக்கம் இது!

இந்த நேரத்தில், நேற்று நாடாளுமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் "பெண்கள் இடஒதுக்கீட்டுக்கும் இந்த மசோதாவுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இது ஒரு தேச விரோதச் சட்டம். இதை அனுமதிக்க மாட்டோம். இதை அனைவரும் சேர்ந்து தோற்கடிப்போம்" எனத் தெளிவான உணர்வுகளை வெளிப்படுத்திய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் அன்புச் சகோதரர் ராகுல் காந்தி, காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சித் தலைவர் சோனியா காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே ஆகியோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் மட்டுமல்ல, திரிணமூல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி, சமாஜ்வாடி தலைவர் அகிலேஷ், ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கேஜ்ரிவால், ராஷ்டிரிய ஜனதா தள செயல் தலைவர் தேஜஸ்வி, தேசியவாத காங்கிரஸ் செயல் தலைவர் சுப்ரியா சுலே, பிஜு ஜனதா தள தலைவர் நவீன் பட்நாயக், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் ஹேமந்த் சோரன், ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் ஃபரூக் அப்துல்லா, சிவ சேனா தலைவர் உத்தவ் தாக்கரே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. பேபி, பி.ஆர்.எஸ் கட்சித் தலைவர் கே.சந்திரசேகர ராவ், சிரோமணி அகாலி தள தலைவர் சுக்பீர் சிங் பாதல் ஆகிய தேசியத் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றிகள்!

அதுவும், தொடக்கத்திலிருந்தே இந்த முயற்சியில் என்னுடைய கரங்களை வலுப்படுத்திய பினராயி விஜயன், ரேவந்த் ரெட்டி, சித்தராமையா, டி.கே. சிவகுமார் ஆகியோருக்கும், தமிழ்நாட்டில் இருக்கிற நம்முடைய கொள்கைத் தோழமைகளான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றிகள்!

இப்போது நாம் பெற்றிருப்பது பாதி வெற்றிதான்! 2001-ஆம் ஆண்டில் செய்தது போன்றே, இப்போதும் அடுத்த 25 ஆண்டுகளுக்கு, அதாவது 2051 வரை, தொகுதி எண்ணிக்கையை மறுவரையறை செய்வதைத் தள்ளி வைக்க அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும்!

# "உங்கள் சொந்த தொகுதியில் வெற்றி பெற முடியுமா?" செங்கோட்டையனுக்கு எடப்பாடி பழனிசாமி கேள்வி



ஈரோடு: "செங்கோட்டையன் எப்போது சிறுமையாக பேச ஆரம்பித்தாரோ, அப்போதே அவர் செல்வாக்கை இழந்துவிட்டார். முதலில் உங்களது சொந்த தொகுதியில் வெற்றி பெற முடியுமா எனப் பாருங்கள்?" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் சட்டப்பேரவைத் தொகுதி, கச்சேரி மேடு பகுதியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பேசிய அவர், "செங்கோட்டையனை எம்எல்ஏ ஆக்க அதிமுக தொண்டர்கள் கடுமையாக உழைத்தனர். அதிமுகவில் யாரையும் வளரவிடாமல் செய்தவர். கட்சியில் இருந்து பலர் வெளியேற காரணமாக இருந்தவர் செங்கோட்டையன். இவர் மிக மோசமான ஆள்.

செங்கோட்டையன் மீது அவரது மனைவி, மகன் புகார் கூறியதால் அப்போது அமைச்சர் பதவி பறிக்கப்பட்டது. செங்கோட்டையனை மீண்டும் அமைச்சராக்கியது நான் செய்த தவறு. கண்ணீர் விட்டு கதறி அழுததால் அமைச்சர் பதவியை வழங்கினேன். செங்கோட்டையன் அவர்களே நான் எப்படிப்பட்டவன் என்று உங்களுக்கு தெரியாது. எனது ஒரு முகத்தைதான் நீங்கள் பார்த்து இருக்கிறீர்கள். இன்னொரு முகத்தை பார்த்தது இல்லை. நான், முதல்வர் ஸ்டாலின் கண்ணிலேயே கையை விட்டு ஆட்டியவன். அதிமுகவின் திட்டம் என்பதால் 'நடந்தாய் வாழி காவிரி' திட்டத்தை திமுக புறக்கணித்து ள்ளது. அந்தத் திட்டத்திற்காக 5 ஆண்டுகள் அதிமுக போராடியது. விசில் அடிக்கும் கூட்டத்தில் இருந்தால் செங்கோட்டையனின் பேச்சு அப்படிதான் இருக்கும். செங்கோட்டையன் எப்போது சிறுமையாகப் பேச ஆரம்பித்தாரோ, அப்போதே அவர் செல்வாக்கை இழந்துவிட்டார். உங்களது சொந்தத் தொகுதியில் வெற்றி பெற முடியுமா என முதலில் பாருங்கள். அரசியல் ரீதியாக பேசுங்கள்; நான் அது குறித்து பதில் சொல்லத் தயார். ஆனால் தனிப்பட்ட முறையில் பேசினால் என்னிடம் நிறைய இருக்கிறது அவற்றை தொலைக்காட்சியில் போட்டு விடுவேன். பின்னர், நீங்கள் கோபியில் நடமாட முடியாது. நான் முதல்வராக இருந்தபோது யார் யார் என்ன செய்தார்கள் என்பது குறித்து எனக்குத் தெரியும். ஜாக்கிரதையாக இருங்கள். அரசியல் ரீதியாக அணுகுங்கள். செங்கோட்டையன் யாரையும் வளரவிடமாட்டார். யாராவது நல்ல ஆடை அணிந்தால் கூட அவருக்கு பொறுக்காது. பணக்காரர்களை கண்டால் மட்டும்தான் பேசுவார்" இவ்வாறு பழனிசாமி தெரிவித்துள்ளார்.

# த.வெ.க.விற்கு ஆதரவாகத் தமிழ்நாட்டு மக்கள் உள்ளனர்; தலைவர் விஜய் உறுதி

சென்னை: அளவில்லாமல் அராஜகத்தையும் ஊழலையும் செய்து, அளவில்லாமல் பொய் வாக்குறுதிகள் தந்து மக்களை ஏமாற்றும் லிமிடெட் கம்பெனி திமுகவை இந்தத் தேர்தலில் ஆட்சிக்கு வரவிடாமல் 'லிமிட்' செய்து, மக்கள் வீட்டுக்கு அனுப்பப் போவது உறுதி என்று தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "தமிழகத்தில் நடக்கும் தேர்தல் நேர நாடகம் குறித்து உங்களிடம் பகிர்ந்துகொள்ளவே இக்கடிதம். தேர்தல் நேரத்தில் திசை திருப்பல்கள் நடப்பது ஒன்றும் புதிதன்று. இருந்தும் உஷாராக இருக்க வேண்டியது நம் கடமை. திசைதிருப்பும் முதலீட்டுக் கழகம், பல்வேறு வழிகளில் மக்களைக் குழப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறது.

பெரியாரும் காமராஜரும் அண்ணாவும் விதைத்த நல்லிணக்கம் பேசும் சமூக நீதி விதைகள் ஆழமாய் வேரூன்றிய மாபெரும் மதச்சார்பற்ற மண் இது. இத்தகைய நம் தமிழ்நாட்டு மண்ணில் என்றைக்கும் பாசிச சக்திகள் வேரூன்ற மட்டுமன்று, காலூன்றவே இயலாது. அதோடு 'பாசிச மனநிலை கொண்ட' மக்கள் விரோத ஆட்சியாளர்களுக்கு, குறிப்பாகத் திமுகவுக்கு மறுமுறை வாய்ப்பு என்பது எட்டாக்கனி என்பதுதான் தமிழ்நாட்டின் அரை நூற்றாண்டுக்கும் மேலான தேர்தல் வரலாறு. தேர்தல் ஆணையத்திடம் என்னதான் பொறுப்பு இருந்தாலும், காபந்து அரசான கபட நாடகத் திமுக அரசு, தன் கையில் வைத்திருக்கும் அதிகாரிகள் சிலரை வைத்து நமக்கு மட்டுமல்லாமல் நம் வேட்பாளர்களுக்கும் பரப்புரை செய்ய நெருக்கடிகளையும் நிர்பந்தங்களையும் நீட்டிக்கவே செய்கின்றது.

கடைசி நேரம் வரை காத்திருக்கச் செய்து, அனுமதிக் கடிதத்தைத் தாமதமாக அளித்து, நமக்கான பிரசார முன்னேற்பாடுகளைச் செய்யவிடாமல் நெருக்கடி தருவது, கடைசி நேரத்தில் தவெக-வின் பரப்புரைக்கான அனுமதியை ரத்து செய்ய வைப்பது, ரத்து செய்வது, நமது பிரச்சார நிகழ்ச்சிகளுக்கான அனுமதி மற்றும் ரத்து குறித்து ஊடகங்களில் புனைவுச் செய்திகள் வெளியிடச் செய்து மக்களைக் குழப்புவது என்று திமுக-வின் பரம்பரைத் தில்லுமுல்லுகள் தொடரத்தான் செய்கின்றன.

என்ன தான் தில்லுமுல்லு செய்தாலும்... நீ தடுத்துவிடலாம் என்று நினைப்பது போல் தவெக ஒன்றும் பழைய ஃபார்மட்டில் ரோட்டில் பிரசாரம் செய்வதை மட்டுமே நம்பி இருக்கவில்லை. தவெகவுக்கு ஆதரவாகத் தமிழ்நாட்டு மக்கள் நலன் சார்ந்த தன்னெழுச்சியான, தன் விருப்பமான பிரச்சாரம் தமிழகமெங்கும் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் மாபெரும் மக்கள் சக்தி இயக்கமாக மாறி நடந்துகொண்டுதான் இருக்கிறது.

தவெக-வின் வெற்றியைத் தடுத்துவிடலாம் என்று, தான் என்ற அகந்தையில் இருக்கும் ஆதாய அரசியல் சூதாடும் அனுபவசாலிகள் அனைவரும் மக்கள் ஓர் அமைதிப் புரட்சிக்குத் தயாரானதை மறந்துவிட்டு ஆடுகின்றனர். இந்த ஆட்டமெல்லாம், வருகிற ஏப்ரல் 21-ம் தேதி வரைதான். ஏப்ரல் 23 அன்றே, ஊழல் சக்திகள் மட்டுமல்லாது, மற்றும் பலருடன் பாசிச சக்திகளும் விசில் புயலில் வீழ்வது உறுதி.

Limitation இல்லாமல் அராஜகத்தையும் ஊழலையும் செய்து, Limitation இல்லாமல் பொய் வாக்குறுதிகள் தந்து மக்களை ஏமாற்றும் லிமிடெட் கம்பெனி திமுக-வை இந்தத் தேர்தலில் ஆட்சிக்கு வரவிடாமல் limit செய்து, மக்கள் வீட்டுக்கு அனுப்பப் போவது உறுதி.

மக்களே... இந்த வேடதாரிகளை நம்பாமல் விழிப்புடன் இருப்போம். வெல்வோம். வாகை சூடுவோம். வரலாறு படைப்போம்" என தெரிவித்துள்ளார்.

**வரி விளம்பரங்கள்**

தினத்தளம்
DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கூடலூர், தோட்டத்தொழிலாளர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தீ தொண்டு வாரம் அனுசரிப்பு



கூடலூர், கூடலூர் - தேவர்சோலை சாலையில் இயங்கி வரும் தோட்டத் தொழிலாளர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தீயணைப்பு துறை சார்பில்

தீ தொண்டு வாரம் அனுசரிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு தொழிற்பயிற்சி மைய முதல்வர் ஷாஜி ஜோர்ஜ் தலைமை தாங்கினார்.

கூடலூர் தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை அதிகாரி V. சங்கர் மற்றும் தீயணைப்பு வீரர்கள் கலந்து கொண்டு தீ தொண்டு வாரம் அனுசரித்தல் தீ தடுப்பு முறைகள், முதலுதவி முறைகள்,தீவிபத்தைதடுப்பதை குறித்து தீயணைப்பு வீரர்கள் கொண்டு செயல் விளக்கத்தை ITI மாணவர்களுக்கு வழங்கினார்கள்.

முடிவில் ஆசிரியர் இராஜா நன்றியுரை வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஐடிஐ மாணவர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# இளையான்குடி கிழக்கு ஒன்றியத்தில் தமிழரசி ரவிக்குமார் சூறாவளி தேர்தல் பிரச்சாரம்





சிவகங்கை மாவட்டம் 2026 ஏப்ரல் 23ஆம் தேதி தமிழகம் முழுவதும் நடைபெற உள்ள 17ஆவது தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு மானாமதுரை (தனி) சட்டமன்ற தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆதரவு பெற்ற திமுக வேட்பாளரும், மானாமதுரை சட்டமன்ற தொகுதியின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் என்ற சாதனை படைத்த திருமதி தமிழரசி ரவிக்குமார் அவர்கள் இளையான்குடி கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அரணையூர், ராஜபுளியேந்தல், கண்டனி, நெஞ்சத்தூர், சூச்சினாங்குடி, சாலியந்திடல், சாத்தனி, பெருமானேந்தல், தோக்கனேந்தல், வல்லக்குளம், ஒச்சந்தட்டு, சோலை ஊரணி, அரண்மனைக்கரை, கலங்காதன்கோட்டை, கீறுகுடி, சொக்கப்படப்பு, வீரன்திடல், கல்லணி, உதயனூர், உச்சாணி, பாப்பாமடை, வெள்ளரேந்தல், பெத்தான்வலசை, நானாமடை, நானாமடை கிழக்கு, சூராணம், சூராணம் கிழக்கு, சூராணம், குடியிருப்பு, ஆக்கவயல், சூரியன்கோட்டை, புக்குளம், புக்குளம் குடியிருப்பு, கல்லடிதிடல்,

கல்லடிதிடல் கிழக்கு, திருகள்ளி, வடக்கு விசவனூர், தெற்கு விசவனூர், மேல விசவனூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வாக்காளர் பெருமக்களை நேரில் சந்தித்து கடந்த ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட திட்ட பணிகளை எடுத்துக் கூறி, வாக்கு இயந்திரத்தில் 2-வது இடத்தில் உள்ள உதயசூரியன் சின்னத்தில் தனக்கு வாக்களித்து மாபெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு தீவிர தேர்தல் பரப்புரை பிரச்சாரம் மேற்கொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். மேலும் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், பம்பரமாக தொகுதி முழுவதும் சுழன்று வரும் தமிழரசி ரவிக்குமார் அவர்களுக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாக்காளர் பெருமக்களின் நன்மதிப்பும், மாபெரும் ஆதரவும் தற்போது வரை நிலவி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்தில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் அமுலு பொன்மலர் சூறாவளி பிரச்சாரம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனி சட்டமன்ற தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் அமுலு பொன்மலரை ஆதரித்து ஒன்றிய கழகசெயலாளர் பொன். சிவகுமார் அவைத் தலைவர் சசிகுமார் தலைமையில் தேவனூர் கூட்டு சாலை, நல்லூர், இரும்பேடு, ஜமீன்பூதூர், சாலையூர், வேட்டூர், உள்ளிட்ட பல்வேறு ஊராட்சிகளில் பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்கள் வழங்கி

கழக நிர்வாகிகள் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். அப்போது அனைத்து கிளைக்

கழகம் சார்பில் வேட்பாளர் அமுலு பொன்மலர்க்கு மாலை அணிவித்து மலர் தூவி பிரமாண்ட வரவேற்பு வழங்கினர். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் தினகரன், விசிக மாவட்ட செயலாளர், அன்புச்செல்வன், உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



## கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதியில்

# பிரதான கட்சிகளை அதிரவைக்கும் சுயேச்சை வேட்பாளர் இரா.மாதேஷ் 'மைக்' சின்னத்திற்கு பிரசாரம்

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதி எப்போதும் விஐபி தொகுதியாகவே பார்க்கப்படுகிறது. இந்தத் தேர்தலில் திமுக, அதிமுக உள்ளிட்ட பிரதான கட்சிகள் தங்கள் தேர்தல் வாக்குறுதிகளை அள்ளிவீசி வரும் வேளையில், அவர்களுக்கு இணையாக - சில இடங்களில் அவர்களை மிஞ்சும் அளவிற்கு - சுயேச்சை வேட்பாளர்கள் அளிக்கும் வாக்குறுதிகள் பொதுமக்களையே வியப்பில் ஆழ்த்தியுள்ளன.தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாள் முதல் பெரிய கட்சிகள் ஊர் ஊராகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால், இதுவரை எந்தவொரு பெரிய கட்சியும் செய்யாத ஒரு முயற்சியைச் சுயேச்சை வேட்பாளர் ஈ.ரா. மாதேஷ் முன்னெடுத்துள்ளார் பர்கூர், ஜெகதேவி வேலம்பட்டி,தளிஅள்ளி, மாரிசெட்டிஹள்ளி உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்குத் தனது ஆதரவாளர்களுடன் இருசக்கர வாகனப் பேரணியாகச் சென்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்

.பெரிய கட்சிகள் ஆடம்பர வாகனங்களில் வலம் வரும் நிலையில், எளிய முறையில் டூவீலரில் வந்து மக்களைச் சந்திப்பது தொகுதி மக்களிடையே நெகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது. சுயேச்சை வேட்பாளர்களின் இந்த அதிரடி வளர்ச்சியும், அவர்களுக்குக் கிடைக்கும் மக்கள் ஆதரவும் பிரதான கட்சிகளான திமுக மற்றும் அதிமுகவினரைச் சற்று யோசிக்க வைத்துள்ளது.

"சுயேச்சை வேட்பாளர்களின் வாக்குறுதிகளும்,அவர்கள் மக்களை அணுகும் விதமும் பெரிய கட்சிகளுக்குச் சவாலாக மாறியுள்ளது. இதன் காரணமாக,செல்வாக்குள்ள சில சுயேச்சைவேட்பாளர்களைத் தங்கள் பக்கம் இழுக்கும் முயற்சியிலும் பிரதான கட்சியினர் ரகசியமாக ஈடுபட்டு வருகின்றனர்."பொதுவாகப் பெரிய கட்சிகள் மட்டுமே மேடை போட்டு வாக்குறுதி அளிப்பார்கள் என்ற பிம்பத்தை உடைத்து, கிராமம் கிராமமாகச் சென்று மக்களின் அடிப்படைத் தேவைகளை அறிந்து இரா.மாதேஷ் அளிக்கும் வாக்குறுதிகள் வாக்காளர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

பர்கூர் தொகுதியில் மைக் சின்னம் எந்த அளவிற்கு ஒலிக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். வேட்பாளர் செல்லும் அனைத்து இடங்களிலும் மேல தாளங்கள் மற்றும் பட்டாசு வெடித்தும் நமது ஆதரவுகளை தெரிவித்தனர்



மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் அருகே மூலக்கரையில் உள்ள தனியார் அரங்கில் மதுனர மாவட்ட பெந்தெகொஸ்தெ ஊழியர்கள் ஐக்கியம் சார்பாக நடைபெற உள்ள தமிழக சட்டசபை தேர்தலில் 100% வாக்குரிமையை வலியுறுத்தியும் வாக்குரிமையுள்ள ஒவ்வொரு குடிமகனும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்றும் வாக்கு மையங்களில் அமைதியான முறையில் எவ்வித பிரச்சினையின்றி தேர்தல் நடைபெறவும் தேர்தலில் மதசார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி அமோக வெற்றி பெறவும் சிறப்பு ஜெப கூடுகை நடைபெற்றது. இதில் பாஸ்டர். டட்லி தங்கையா,பிரதர்.மனுவேல்ஜெயராஜ், பாஸ்டர்கள் டான்டேவிட், இஸ்ரேல்,சசிசுதாதியா உட்பட பலர் சிறப்பு ஜெப கூடுகையில் கலந்து கொண்டனர்.

## சித்தாமூர் அருகே

# பானை சின்னத்தில் போட்டியிடும் விசிக வேட்பாளர் சிந்தனைச்செல்வன் வாக்கு சேகரிப்பு




செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் தனி சட்டமன்ற தொகுதி வி.சி.க.சார்பில் பானை சின்னத்தில் போட்டியிடும் சிந்தனைச்செல்வன் சித்தாமூர் திமுக ஒன்றிய கழக செயலாளர் சிற்றரசு தலைமையில் புத்திரன் கோட்டை,

பெரியகளக்காடி , நுகம்பல், உள்ளிட்ட பல்வேறு ஊராட்சிகளில் மலர்தூவி மாலை அணிவித்து சிறப்பான வரவேற்பு அளித்தனர் அதனைத் தொடர்ந்து ஊராட்சி மன்ற தலைவர் வடிவேல் முன்னிலையில் பொது மக்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது மாலை அணிவித்து மலர்தூவி சிறப்பு வரவேற்பு வழங்கப்பட்டது. இதில் விசிக நிர்வாகிகள் மண்டல செயலாளர் ஆதவன், மாவட்ட செயலாளர் புகழேந்தி, கிளைச் செயலாளர் பாலசுப்பிரமணி சுதாகரன் என். சுப்பிரமணி ஜமால் (எ)எழில்வளவன் , உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.



நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மோளியப்பள்ளி ஸ்ரீ பெரியகாண்டி அம்மன் ஸ்ரீ அண்ணமார் சாமிகளுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்று அதன் பின்னர் மண்டல அபிஷேகம் நடைபெற்றுவருகிறது.அமாவாசைதினத்தைமுன்னிட்டு பெரியகாண்டி அம்மன் மற்றும் அண்ணமார் சாமிகளுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் நடைபெற்றது விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# கோவை வடக்கு சட்டமன்ற தொகுதியில் சுயேச்சை வேட்பாளர் சத்ரபதி சிவாஜி பிரச்சாரம்




கோவை சத்ரபதி சிவாஜி அறக்கட்டளை மற்றும் தமிழ்நாடு அனைத்து வகை அமைப்பு சாரா தொழிலாளர் நல நற்பணி சங்க நிறுவனருமான சரவணன், மக்கள் ஆசியுடன், கோவை வடக்கு சட்ட மன்ற தொகுதியில் சுயேச்சையாக போட்டியிடுகின்றார். இவருக்கு தேர்தல் ஆணையம் ஸ்டூல்சின்னத்தைஒதுக்கியுள்ளது.அவ்வாறு ஒதுக்க பட்டுள்ளசின்னத்திற்குவாக்கசேகரிக்கும்பணிகளை இன்று துவங்கினார். இவர் கோவை பாப்பநாயக்கன் புதூர் பகுதியில், உள்ள ஸ்ரீ பூமி நீளா தேவி சமேத வரதராஜ பெருமாள் திருக்கோவிலில், சிறப்பு பூஜைகள் செய்து தனது தேர்தல் பரப்புரையை மேற்கொண்டார். மேலும் இது குறித்து சரவணன் கூறுகையில், இன்று வாகன பிரச்சாரத்தை மக்கள் மத்தியில் துவங்கியுள்ளதாகவும், நாளை முதல், நேரடியாகமக்களைசந்திக்கஉள்ளதாகதெரிவித்தார். வடக்கு சட்ட மன்ற தொகுதியில் உள்ள பொதுமக்களின் தேவைகள் பல்வேறு உள்ளது. அவற்றை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய பாடுபடுவேன் எனவும், மாதம் இருமுறை மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து அவற்றை உடனடியாக தீர்க்க உரிய நடவடிக்கை எடுப்பேன். மக்கள் எந்த தேவைகளுக்காகவும் என்னை எப்பொழுதும் சந்திக்கலாம் என கூறினார். இந்த நிகழ்ச்சியில்

தமிழ்நாடு அனைத்து வகை அமைப்பு சாரா தொழிலாளர் நற்பணி நலச்சங்க மாவட்ட தலைவர், கட்டுமான பிரிவு கருப்புசாமி, ஈஸ்வரன், கிருஷ்ணன், ரெத்தினம், நாகராஜ், அரவிந்த், சங்கர், மூர்த்தி, கோவிந்தன், மதியழகன், விஜி, சிவதாசன், ஆனந்தன், தமிழ்நாடு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நற்பணி நலச்சங்கம் ஆட்டோ ஒட்டுநர்கள் பிரிவு கோவை மாவட்ட தலைவர் ஜோசப், மாநகர தலைவர் இசக்கி ராஜா, இளைஞரணி நவீன் குமார்,

ஜெய் ஹனுமன் வெற்றி சேனா அமைப்பின் நிறுவனர் கே.எஸ். கனகராஜ், வெற்றி செல்வன், தீரன் சின்னமலை கவுண்டர் இளைஞரணி நிறுவனர் கவின், சத்ரபதி சிவாஜி அறக்கட்டளையின் பசியில்லா தமிழக அங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரூ.200 கோடி மோசடி வழக்கில் அப்ரூவராக ஜாக்குலின் மனு




புதுடெல்லி:

மத்திய சட்ட அமைச்சக உயர் அதிகாரி போல் கர்நாடகாவைச் சேர்ந்த சுகேஷ் சந்திரசேகர் என்பவர் நடித்து, ரூ.200 கோடி வரை மோசடி செய்துள்ளார். இவர் நடிகை ஜாக்குலின் பெர்னாண்டஸுக்கு விலை உயர்ந்த பரிசுகளை வழங்கியதாக குற்றம்சாட்டப்பட்டது.

இதுதொடர்பான அமலாக்கத் துறை வழக்கு டெல்லி பாட்டியாலா ஹவுஸ் நீதிமன்ற நீதிபதி பிரசாந்த் சர்மா முன் நடைபெற்றது. அப்போது, இந்த வழக்கில் அப்ரூவராக மாறுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று நடிகை ஜாக்குலின்தரப்பில்மனுதாக்கல்செய்யப்பட்டது.



மதசார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் கை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்திட தமிழ்நாடு மகிளா காங்கிரஸ் பொறுப்பு தலைவி பரமக்குடி ராமலட்சுமி 17.04.2026 அன்று காலை ஈரோடு தேர்தல் பணிமனைக்கு வந்திருந்தபோது ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் துணைத்தலைவர் கே.எஸ்.செல்வம், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மைத்துறை துணைத்தலைவர் கே.என்.பாஷா, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடகப்பிரிவு தலைவர் ம.முகமது அர்சத் மற்றும் காங்கிரஸ் நிர்வாகி கனிராவுத்தர் குளம் சபீர் அகமது மற்றும் மகிளா காங்கிரஸ் நிர்வாகிகள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.




ஈரோடு மாவட்டம், பெருந்துறை சட்டமன்றத் தொகுதியில் (18.04.2026) அன்று மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026, பார்வை குறையுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு பிரெய்லி அம்சத்துடன் கூடிய வாக்காளர் தகவல் சீட்டினை வழங்கிய போது எடுத்த புகைப்படம்

## கழுதூர் மந்திரி என்று சொல்லும் அளவிற்கு ஊரை உயர்த்தியுள்ளேன்

### சொந்த கிராமத்தில் அமைச்சர் சி.வெ. கணேசன் தீவிர வாக்குச் சேகரிப்பு




கடலூர் மாவட்டம் திட்டக்குடி (தனி) தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் அமைச்சர் சி.வெ. கணேசன், தனது சொந்த ஊரான கழுதூர் கிராமத்தில் நேற்று தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். மக்கள் அளித்த பிரம்மாண்ட வரவேற்பை ஏற்று மாரியம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்த அவர், ஊரின் அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றி 'கழுதூர் மந்திரி' என்று பெருமையோடு சொல்லிக்கொள்ளும் அளவிற்கு கிராமத்தின் தரத்தை உயர்த்தியுள்ளதாகக் கூறி வீதி வீதியாக நடந்து சென்று ஆதரவு திரட்டினார். அரியநாச்சி மற்றும் சமத்துவபுரம் உள்ளிட்ட பகுதிகளிலும் அவர் நேரடியாகச் சென்று பொதுமக்களிடம் வாக்குகளைச் சேகரித்தார். இந்த தீவிர பிரச்சாரத்தின் போது விசிக மாவட்ட பொருளாளரும், தேர்தல் ஒருங்கிணைப்பாளருமான சஞ்சய்காந்தி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் செல்வி ராஜரத்தினம், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கருணாநிதி, கிளைச் செயலாளரும் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளருமான சேகர் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி நால்ரோடு பகுதியில் (18.04.2026) அன்று மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" குறித்து நடைபெற்ற வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வு துண்டுபிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயதீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களை உதயசூரியன் சின்னத்தில் ஆதரித்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஈரோடு மாவட்டம் ஆனைக்கல்பாளையத்தில் வாக்கு சேகரித்தார்.




ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி நால்ரோடு பகுதியில் (18.04.2026) அன்று மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" குறித்து நடைபெற்ற வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி நடத்தப்பட்ட விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

## மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கீதாஜீவன் திருவிக நகரில் பிரச்சாரம்



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளரும் அமைச்சருமான கீதாஜீவன் மாநகராட்சிக்குட்பட்ட

5, 35, 36, 44, 51வது ஆகிய வார்டு பகுதியான திருவிக நகரில் பிரச்சாத்தை துவங்கி இந்திராநகர், கணேஷ் நகர், போல்டன்புரம். சுப்பையாபுரம், மாசிலாமணிபுரம். பிரையண்ட் நகர், கிருஷ்ணராஜபுரம், அன்னைவேளாங்கன்னிநகர், உள்ளிட்ட பல பகுதிகளில் பிரச்

தூத்துக்குடி மாநகர பகுதியான ஜிசி காலணி செல்சீலினி காலணி, கால்டுவெல்காலணி, 3 செண்ட் அந்தோணியார்புரம், சாந்திநகர், அமுதாநகர் உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.

பிரச்சாரத்திற்கு மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், மேயர் ஜெகன் பெரியசாமி, வட்டச்செயலாளர்கள் செல்வராஜ் சிங்கராஜ், சுப்பையா, கவுன்சிலர் விஜயலட்சுமி, அந்தோணிபிரகாஷ்மார்ஷலின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பின்னர் பிரச்சாரத்தில் அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்: தமிழகத்தில் வருகின்ற 23ம் தேதி நடைபெறவுள்ள தேர்தல் நமக்கான தேர்தலாகும் அதில் உங்களுக்காக பணியாற்றும் மக்கள் பிரதிநிதியை தேர்ந்தெடுக்கும் தேர்தலாகும். தமிழகத்தில் 5 ஆண்டுகாலம் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் நல்லாட்சி நடைபெற்றுள்ளது கீழடி அகல்வாராய்ச்சி அறிக்கையை கூட ஏற்பதற்கு ஒன்றிய பாஜக அரசுக்கு மணமில்லை எந்த நிதியும் வழங்குவதில்லை புதிய கல்வி கொள்கையை ஏற்றால் தான் கல்வி நிதி வழங்குவோம் என்று ஒவ்வொரு விஷயத்திலும் தமிழகத்திற்கு எதிராகதான் ஒன்றிய பாஜக அரசு செயல்படுகிறது. அதற்கு பின்னால் அதிமுக இருந்து கொண்டு இவர்கள் பின்னால் முகமூடி அணிந்து கொண்டு பாஜக தமிழகத்திற்குள் நுழைய பார்க்கிறது. தமிழகத்திற்கு ஏதுமே செய்யாத அதிமுக பிஜேபி கூட்டணியை நாம் வீழ்த்தியாக வேண்டும். இது காலத்தின் காட்டாயம் எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் அனைவரும் எல்லா வகையிலும் நன்மை கிடைத்துள்ளது. அதனால் திமுக ஆட்சி தொடர வேண்டும். தமிழகத்தின் மண மானம் மொழி அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் மீண்டும் முதலமைச்சராக முக.ஸ்டாலின் மீண்டும் வரவேண்டும். அதற்கு தூத்துக்குடி தொகுதியில் எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். மழை வெள்ளம் கொரோனா போன்ற பல காலக்கட்டங்களில் உங்களுக்காக அனைவருக்கும் நான் பணியாற்றியுள்ளேன் மற்றவர்களை போல் தேர்தலுக்கு மட்டும் வருகின்ற கட்சி திமுக கிடையாது. மற்றவர்களுக்கு போடுகின்ற ஒவ்வொரு வாக்கும் தேவையில்லாமல் சென்று விடும் வாக்காக இருந்து விடும். இன்றைய தலைமுறையினர் மட்டுமின்றி அடுத்த தலைமுறையையும் பற்றி சிந்தித்து பணியாற்றுகிறார் முதல்வர் ஸ்டாலின் அதனால் அனைவரும் ஒட்டு மொத்தமாக திமுகவிற்கு வாக்களிக்கவேண்டும். என்று பேசினார்.

பிரச்சாரத்தில் திமுக மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ் மாவட்ட துணைச்செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாநில பொறியாளர் அணி துணைச்செயலாளர் அன்பழகன். மண்டலத்தலைவர் வக்கீல் பாலகுருசுவாமி, மாநில பேச்சாளர் சரத்பாலா, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ரமேஷ். பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஜான்சன், சிறுபான்மை அணி துணை அமைப்பாளர்கள் நிக்கோலாஸ் மணி, பெனில்டஸ். ஆதிதிராவிட நல அணி துணைத்தலைவர் பெருமாள், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் அந்தோணிகண்ணன். பகுதி செயலாளர்கள் மேகநாதன் ஜெயக்குமார். ராமகிருஷ்ணன், பொருளாளர் முத்துராஜா, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அருண்சுந்தர், இலக்கிய அணி அமைப்பாளர் ஜீவன் ஜேக்கப், துணை அமைப்பாளர் பால்ராஜ், சுற்றுச்சூழல் அணி தலைவர் வினோத் அமைப்பாளர் சாரதி துணை அமைப்பாளர் மகேஸ்வரன்சிங், தொண்டரணி அமைப்பாளர் முருகஇசக்கி. துணைத்தலைவர் செந்தில்குமார், மாணவரணி துணை அமைப்பாளர் சத்யா, வழக்கறினார் அணி அமைப்பாளர் ரூபஸ்அமிர்தராஜ், துணை அமைப்பாளா ரூபராஜா, அதிதிராவிட நல அணி அமைப்பாளர் பரமசிவம், இலக்கிய அணி துணை அமைப்பாளர் பிக்அப் தன்பால், மகளிர் அணி துணை அமைப்பாளர் நாராயணவடிவு, சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் சாகுல்ஹமீது, பகுதி அணி அமைப்பாளர்கள் சூர்யா, குமார் நிர்மல் சரவணக்குமார் ஆனந்தி, கவுன்சிலர்கள் இசக்கிராஜா, அறுமுகம் ஜெயசீலி வழக்கறிஞர்கள் ஆனந்த கபரியேலராஜ், டென்னிஸ்ராஜ், முன்னாள் கவுன்சிலர்கள் சங்கர், வெங்கடகிருஷ்ணன், தொழிற்சங்க நிர்வாகிகள் முருகன், உலகநாதன், மாவட்ட பிரதிநிதிகள் சேர்மபாண்டியன், ஏசுவடியான், மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் சகாயராஜ், பெருமாள்சாமி. முன்னாள் மாவட்ட தலைவர் முரளிதரன், காங்கிரஸ் நிர்வாகிகள் ஐசன்சில்வா, நிர்மல்கிறிஸ்டோபர், ராஜன், செந்தூர்பாண்டி, ப்ராத்தி, சிமியோன், மைதீன். விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட செயலாளர் விமல்வங்காளியார், தேமுதிக மாவட்ட செயலாளர் தயாளலிங்கம். பொறுப்பாளர் வல்லரசு துரை, முக்குலத்தோர்புலிப்படை மாவட்ட செயலாளர் மணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் தனலட்சுமி, மதிமுக மாநகர செயலாளர் முருகபூபதி. எஸ்டிபிஐ கட்சி மாவட்ட செயலாளர் மைதீன்கனி, மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட துணைச்செயலாளர் ஜாகிர்உசேன், அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், பிரதிநிதிகள் செந்தில்குமார். பாஸ்கர், துரை, அணைக்குட்டி, பால்துரை, புஷ்பராஜ், மற்றும் சகுந்தலா, மணி அல்பட் உள்பட கூட்டணி கட்சியை சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

# விஜய் விகாஸ் பள்ளி பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி: சாதனை படைத்த மாணவர்களுக்கு பாராட்டு



ஈரோடு மாவட்டம் பெருந்துறை கம்புளியாம்பட்டியில் உள்ள விஜய் விகாஸ் இண்டர்நேசனல் பள்ளியில் 202526 கல்வியாண்டு பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் மாணவர்கள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளனர். இதில் மாணவர் இறையன்பு 481 மதிப்பெண்கள் பெற்று முதலிடமும், மாணவி அன்னப்பூரணி 475 மதிப்பெண்கள் பெற்றுஇரண்டாமிடமும்,மாணவிகள்அக்சராமற்றும்திவ்யாகரணிஆகியோர்471மதிப்பெண்கள்பெற்றுமூன்றாமிடமும் பிடித்து பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர். பாடவாரியாக ஆங்கிலத்தில் 98, தமிழில் 99, அறிவியலில் 98, சமூக அறிவியலில் 97 மற்றும் கணிதத்தில் 92 என உயர் மதிப்பெண்கள் கிடைத்துள்ளன. சாதனை படைத்த மாணவர்களுக்கு பள்ளியின் தலைவர் கலைச்செல்வன், துணைத்தலைவர் மற்றும் தாளாளர் பழனிசாமி, பொருளாளர் என்.தவமணி ஆகியோர் பரிசுகள் வழங்கி பாராட்டினர். மேலும் பள்ளியின் இயக்குனர்கள், முதல்வர் பிரான்சிஸ், துணைமுதல்வர் ராஜேந்திரன், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மாணவர்களின் இந்த வெற்றியை பாராட்டி சிறப்பித்தனர்.

# ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டில் 16வது மாதமாக 2000க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம்



ஈரோடு தாளவாடி தலைமலை தொட்டபுரம் ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சேவா அறக்கட்டளை மற்றும் ஈரோடு தினசரி காய்கறி சந்தை நண்பர்கள் இணைந்து, கடந்த இரண்டு வருடமாக தங்களது சேவையைத் தொடர்ந்துள்ளனர். ஈரோடு நேதாஜி காய்கறி சந்தையில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, 16-வதுமாதமாகச்சிறப்பு அன்னதானம் நடைபெற்றது. ஆஞ்சநேயர் படத்திற்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பூஜைகள் நடைபெற்ற பின்பு அன்னதானம் தொடங்கப்பட்டது.

இந்தநிகழ்விற்குமுன்னிலை ஞானசேகரன் சிறப்பு அழைப்பாளர்கள் முருகன் டெக்ஸ் உரிமையாளர் சண்முகசுந்தரம்,வைஷ்ணவிடெக்ஸ் உரிமையாளர் கோபால் மற்றும் கோவில் அறங்காவலர்கள் அன்னதான கமிட்டியின்நிர்வாகிகள், மகளிர் அணியினர் கலந்துகொண்டு 2000-க்கும் மேற்பட்ட குழந்தைகள், பெரியவர்கள், முதியோர்களுக்கு உணவை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து, ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சார்பாக ஈரோடு கொங்கலம்மன் கோவில் வீதியிலும்சுமார்700பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் திருக்கோவில் அறக்கட்டளை சார்பாக தாளவாடியில் அமைந்துள்ள மனநல காப்பகத்தில்250பேருக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (18.04.2026) அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 வாக்குப்பதிவு நாளான 23.04.2026 அன்று தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அத்தியாவசிய பணியாளர்கள் மற்றும் காவலர்கள் தபால் வாக்கு செலுத்தும் வசதி மையங்களில் கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# Small, nimble, hidden in caves: How Iran's 'mosquito fleet' of boats ensures Strait of Hormuz blockade



*The mosquito fleet is a flotilla of small, fast, agile boats designed to attack and keep the maritime area near the Strait in check.*

*The US-Iran war has proved to be one full of setbacks for Washington – if not catastrophic – as the White House struggles to wrap up the conflict, which it initially said would take "four or five weeks".*

*What has inarguably been surprising in the conflict is President Donald Trump's administration's ignorance of Iranian mettle. Especially, when it comes to combat in the air or the naval blockade of the Strait of Hormuz, a motif that has dominated the two-month conflict. While Iran's low-cost Shahed drones or advanced defence system are capable of even shooting the most sophisticated US jets, including an F-35, little is known about the Iranian navy and its offshoots. The US and Israel claim to have destroyed most of the Iranian warships; however, a "mosquito fleet" – a moniker used for the size of the ships involved – continues to pose threat. The 'mosquito fleet', along with missiles and drones launched from camouflaged sites from Iranian onshore sites, has been the main threat for the vessels stranded on either side of the Strait of Hormuz. The mosquito fleet is a flotilla of small, fast, modified boats designed to attack and keep the maritime area near the Strait of Hormuz in check. The flotilla is the heart of the naval forces deployed by the Islamic Revolutionary Guards Corps, a parallel force to the Iranian army.*

*The naval fleet of the IRGC was added around 1986, some years after the inception of the land forces.*

*The small attack boats were modified using recreational boats mounted with rocket-propelled grenades or machine guns, The New York Times reported. Over the years, IRGC has dedicated focus to built a range of these designed small boats, coupled with miniature submarines and marine drones.*

*The nimble boats can reach the speeds of as high as 100 knots or 185 kilometres per hour.*



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் சென்னிமலை ஒன்றியத்திற்க்கு உட்பட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு திமுக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஒன்றியம், பாண்டிபாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் 2025 & 2026 ஆம் ஆண்டு கல்வி ஆண்டின் ஆண்டு விழாவில் ஊர் பொதுமக்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் ஒருங்கிணைந்து இப்பள்ளியின் தலைமை ஆசிரியை க.ரா.விஜயலட்சுமிக்கு சீர்வரிசை வழங்கி கௌரவித்தனர். இவ்விழாவில் பள்ளியின் முன்னாள் மாணவர்கள், ஆசிரியர்கள், சிறப்பு விருந்தினர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



அஇஅதிமுக கூட்டணியின் பாஜகவின் ஈரோடு மாவட்ட மொடக்குறிச்சி தொகுதி வேட்பாளர் கிருத்திகா சிவக்குமார் தாமரை சின்னத்தில் கிளாம்பாடி, வெள்ளோட்டம் பரப்பு, நடுப்பாளையம் ஆகிய பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

## கோவை கவுண்டம்பாளையம்

# இந்திராநகர் பகுதியில் உள்ள நியூகிரெஸன்ட் மழலையர் மற்றும் துவக்கப்பள்ளியின்24வது ஆண்டு விழா



கோவை கவுண்டம்பாளையம் இந்திரா நகர் பகுதியில் உள்ள நியூகிரெஸன்ட் மழலையர் மற்றும் துவக்கப்பள்ளியின்24வது ஆண்டு விழா நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது பள்ளியின் தலைவர் ஜனாப் ஐ.சுக்ருல்லாபாபு தலைமை தாங்கினார். பள்ளியின் தாளாளர் ஜி.டி. ஜாபர்அலி முன்னிலை வகித்தார் .விழாவில், சிறப்பு அழைப்பாளராக மஸ்ஜித்தே நூர் பள்ளிவாசலின் செயலாளர் ஏ.தாஜ்முகம்மது, பொருளாளர் அப்துல் ரவூப் மற்றும் மாணவ மாணவியர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

முன்னதாக யூகேஜி மற்றும் 5ம் வகுப்பு மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

மாணவர்களுக்கு பள்ளியின் தலைவர் சுக்ருல்லாபாபு பட்டங்களை வழங்கி மாணவர்களை பெருமை படுத்தினார்.

பள்ளியின் தாளாளர் ஜாபர் அலி,

பள்ளியின் முதல்வர் ராணிமார்கரெட்,

துணை முதல்வர் ரஜியா பேகம் ஆகியோர் பட்டங்களை பெறும் மாணவ மாணவியர்களுக்கு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

தொடர்ந்து பள்ளியில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகளும் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

சுட்டி குழந்தைகளின் நடன நிகழ்ச்சி, யோகா நிகழ்ச்சி, தனித்திறமை வெளிபடுத்தும் பேச்சு போட்டி, கதை, கவிதை, கட்டுரை, பாடல்கள் பாடுதல் என பல்வேறு நிகழ்ச்சிகளில் சுட்டி குழந்தைகள் தங்களது திறமைகளை வெளி படுத்தி அசத்தினர். விழாவுக்கான ஏற்பாடுகளை பள்ளியின் ஆசிரியர்கள் மிக சிறப்பாக செய்திருந்தனர் இதில், மாணவ மாணவியர்கள், பள்ளி குழந்தைகள், குழந்தைகளின் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.